Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 10, 2023

திங்கட்கிழமை ஜூலை 10, 2023 | ஒளி: 09 கதிர்: 036 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

# மேன்முறையீடுகள் இன்றுடன் நிறைவு



'அஸ்வெசும' தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை இன்று (10) பிற்பகலுக்கு முன்னர் பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார். 'அஸ்வெசும' நலன்புரி திட்டம் தொடர்பான மேன்முறையீடுகள்

தொடர்ச்சி P2

# "ஐ.ஜி.பிக்கு தகுந்த நபரை கண்டுபிடிக்க முடியவில்லை"

**பொலிஸ் மாஅதிபர் சி.டி விக்ரமரத்னவின் பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு**

**மூப்புக்கு ஏற்ப, ஒன்று முதல் நான்கு வரையிலானவர்களுக்கு வழக்குகள் இருக்கின்றன**



நாட்டில் ஒழுக்கம் மிகவும் சீர்குலைந்துள்ளதால், பொலிஸ் மா அதிபர் ஓய்வு பெற்றதன் பின்னர், குற்றச்சாட்டுகள் அற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே தற்போதைய பொலிஸ் மா அதிபரின் பதவியை மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள், உட்பட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களின் வரிசையில் இருப்பதாகவும், அவர்களில் மூப்புக்கு ஏற்ப, ஒன்று முதல் நான்கு வரையிலானவர்களுக்கு வழக்குகள் பல்வேறு குற்றவியல்

தொடர்ச்சி P2

# யார் இவர்?



இரண்டு வயது சிறுவனை தண்ணீர் தொட்டியில் மூழ்கடித்து, கொல்ல முயலும் வீடியோ, சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. இந்த நபர் மற்றும் இந்தச் சம்பவம் குறித்து, பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவரைப் பற்றி ஏதேனும் தகவல் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# தவிசாளர் மீது தாக்குதல்; மாஜி மாநகர சபை உறுப்பினர் மாயம்



**கனகராசா சரவணன்**

அக்கரைப்பற்றில் உள்ள பாடசாலையில் இடம்பெற்ற அபிவிருத்தி சங்க கூட்டத்தில், மத்தியஸ்த சபை தவிசாளர் மீது முன்னாள் மாநகர சபை உறுப்பினர் தாக்குதல் மேற்கொண்டதில் தவிசாளர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளளார்.

தாக்குதலை மேற்கொண்டவர் தப்பியோடி தலைமறைவாகியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



# சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பர்

'ஊழல் ஒழிப்பு' என்ற சொற் பதத்துக்கு பொருத்தமான ஆணைக்குழுவொன்று விரைவில் உருவாகும் என்றும் முழு நாட்டினதும் எதிர்பார்ப்பாக காணப்படும் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பர் என இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# தேடுவதற்கு உதவுங்கள்

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோபூர்வ சின்னமான (Coats of Arms) எவரிடத்திலேனும் இருக்குமாயின் அதனை ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2022-07-09 - 2022-07-14 வரையிலான தினங்களில் ஜனாதிபதி மாளிகையை கையகப்படுத்திக்கொண்டு அதற்குள் தங்கியிருந்த காலப்பகுதியில் கலைத்துவ மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க பல்வேறு பொருட்கள் காணாமல் போயுள்ளன.

தொடர்ச்சி P2




# 74 இந்திய மீனவர்கள் கைது; 12 படகுகள் சிக்கின


2023ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில், இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீன்பிடி படகுகளுடன் 74 இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டின் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய பல நாள் மீன்பிடி படகுகள் 02 வட கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# விபத்தில் குழந்தை பலி

**எம் எஸ் எம் நூர்தீன்**



மட்டக்களப்பு, தன்னாமுனையில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற விபத்தில், பாலமுனையைச் சேர்ந்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது, காயமடைந்த மூன்று பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலமுனையைச் சேர்ந்த ஒரு வயதும் மூன்று மாதங்களும் பூர்த்தியான பாத்திமா மைஸ்ஹறா எனும் குழந்தையே

தொடர்ச்சி P2

## மாற்றுத்திறனாளிகளுக்கு

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க விசேட குழு

**நபருக்கு ஏற்பட்டுள்ள அங்கவீனம், வாகனத்தை ஓட்டுவதற்கு இடையூறாக உள்ளதா என்ற நடைமுறை சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது**




மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பான புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும் அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஸாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்தார். இந்தக் குழுவில் மோட்டார் போக்குவரத்து பிரதி ஆணையாளர், மோட்டார் போக்குவரத்து தலைமை

தொடர்ச்சி P2

# இந்திய விஜயத்தின் பின் ஒக்டோபரில் சீன விஜயம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, எதிர்வரும் 20 ஆம் திகதி புதுடெல்லி செல்லவுள்ளார். அவர், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

தொடர்ச்சி P2

# நிதானமிழந்த டயானா; அகற்றுமாறு கோரிக்கை

**சமூக ஊடகங்களில் பரவி வரும் 'கிளிப்' இராஜாங்க அமைச்சருக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வருகிறது**

தொலைபேசியில் ஒரு நபரை துஷ்பிரயோகம் செய்யும் 'ஓடியோ கிளிப்'பை அகற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இணைய குற்ற விசாரணைப் பிரிவின் இயக்குநருக்கு அனுப்பிய கடிதத்தில், சமூக ஊடகங்களில் பரவி வரும் அந்த 'கிளிப்'பை அகற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சரின் ஊடகச் செயலாளர் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

ஷான் கனேகொட என்ற நபர், இராஜாங்க அமைச்சரை புதன்கிழமை (05) தொலைபேசியில் பலமுறை தொந்தரவு செய்ததாக

தொடர்ச்சி P2

# துகிலுரித்த 8 பேருக்கு விளக்கமறியல்




நவகமுவ பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவரும், இரண்டு பெண்களும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 சந்தேகநபர்களையும், எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை பதில் நீதவான் ஹேமந்த வெத்தசிங்க, சனிக்கிழமை (08) உத்தரவிட்டார்.

தேரர் ஒருவரும், இரண்டு பெண்களும் குழுவொன்றால் நிர்வாணப்படுத்தப்பட்டு, பொல்லால் தாக்கப்படும் வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டிருந்தது.

தேரர் ஒருவர் மற்றும் இரண்டு பெண்களின் ஆடைகளைக் களைந்து, அவர்களை நிர்வாணப்படுத்தி, கடுமையாகத் தாக்கியமை பாரிய குற்றமாகும் என்றும் எவருக்கும் சட்டத்தை கையில் எடுக்க முடியாது என்றும் தெரிவித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், சந்தேகநபர்களைக் கைது செய்ய பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

தொடர்ச்சி P2

## பல்கலைக்கழகம்

# மலையகத்தில் நிச்சயம் மலரும்

**மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்கிறார் ஜீவன்**



கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் மலையக பல்கலைக்கழகத்துக்கான பணிகள் ஸ்தம்பித்ததாகவும் இது தொடர்பில் ஜனாதிபதியிடமும் கல்வி அமைச்சரிடமும் கலந்துரையாடியதாகவும் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கண்டுபிடிக்க முடியவில்லை”

நீதிமன்றங்களில் இருப்பதாகவும், ஐந்தாவது முதல் எட்டாவது வரை இருப்பவர்கள் மட்டுமே எவ்விதமான குற்றச்சாட்டுகளும் இன்றி இருக்கின்றனர் என்றும் ரங்கே பண்டார கூறினார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுக்கத்தையும் அமல்படுத்த வேண்டிய அணிக்கே இந்த நிலை என்றால் நாட்டின் ஏனைய அணிகளில் சட்டம், ஒழுக்கம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்னவின் பதவிக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ்ஸின் பரிந்துரையின் பேரில் அரசமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதியால், பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## விபத்தில் குழந்தை பலி

உயிரிழந்துள்ளது. பாலமுனையில் இருந்து ஏறாவூரை நோக்கி ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த போது தன்னாமுனையில் வைத்து அந்த ஓட்டோ விபத்துக்கு உள்ளாகியுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேடுவதற்கு உதவுங்கள்

இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோபூர்வ சின்னமாக காணப்பட்ட (Coats of Arms) சின்னங்கள் பலவும் அவற்றுள் அடங்கும்.

அரசாங்கத்தின் சொத்துகளை சட்டவிரோதமாகத் தம்வசம் வைத்துக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதால், குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் மேற்படி சின்னம் நபரொருவரிடத்தில் அல்லது நிறுவனமொன்றிடத்தில் இருக்கும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மேலும், இது பற்றிய தகவல்களை அறிந்திருப்பின் 0112354354 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக, ஜனாதிபதி அலுவலகத்திற்கு தகவல் வழங்குமாறு கேட்டுகொண்ட ஜனாதிபதியின் செயலாளர், தேசிய பெறுமதிமிக்க உத்தியோகபூர்வ சின்னத்தை தேடியறிவதற்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

## துகிலுரித்த 8 பேருக்கு விளக்கமறியல்

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அமைச்சர் டிரான் உத்தரவைப் பிறப்பித்தார்.

அதற்கமைய கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை கடுவெல நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## சட்டத்தை எதிர்ப்போரை...

அரசாங்க துறைக்குள் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளை தவிர்ப்பதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு மூலோபாய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் புதிய சட்டத்தின் கீழ் அந்த செயற்பாடுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்படும் ‘101’ கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் செயற்பாடுகளை போராட்ட வடிவங்களாக மாற்றிக்கொள்ளாது அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கான விடயமாகவே ஊழல் ஒழிப்புக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படவிருப்பதாகவும் சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது.

சிங்கப்பூர், ஹொங்கொங், பூட்டான், இந்தோநேசியா, மலேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளை போன்றே ஸ்கெண்டினேவிய நாடுகளும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை ஒழித்த நாடுகள் வரிசையில் முன்னணியில் நிற்கின்றன.

அந்த நாடுகளின் மக்கள் மத்தியில் மேற்படி செயற்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கம் வேறூன்றிக் காணப்படுகின்ற போதிலும் நமது நாட்டவர் மத்தியில் அவ்வாறான எண்ணங்கள் இல்லை. அதனால் கல்வித்துறையில் முழுமையான மறுசீரமைப்பை மேற்கொள்ளும் அதேநேரம் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது நாட்டின் மிக முக்கியமான ஓர் அத்தியாயத்தையே நாம் இப்போது கடந்துச் செல்கிறோம். புதிய சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில் எமது அபிமானம் மேலோங்கும். இருப்பினும் சட்டம் கொண்டுவரப்படுவதால் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் முற்றாக ஒழிந்துவிடாது.

இந்தப் புதிய சட்டத்தினூடாக, ஆணைக்குழுவுக்கு அவசியமான நிபுணர்களை புலனாய்வாளர்களாக நியமிக்க அதிகாரம் உள்ளது. அவர்களின் சேவை திருப்தி அற்றதாக காணப்படும் பட்சத்தில் ஒப்பந்த காலம் நீடிக்கப்படுவதை தவிர்க்கலாம். இதன்படி, திறமையான புலனாய்வாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய மேற்படிச் சட்டத்தின் ஊடாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க விசேட குழு

பரிசோதகர் மற்றும் வைத்தியரொருவர் ஆகியோர் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகளை பரிசோதித்து அவர்களின் நிலைமையை ஆராய்ந்து, வாகனங்களை செலுத்தும் இயலுமை காணப்படுகின்றதா என்ற ஆரம்பகட்ட பரிசோதனை இந்த குழுவால் மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட நபருக்கு ஏற்பட்டுள்ள அங்கவீனம், வாகனத்தை ஓட்டுவதற்கான பாகங்களைப் பயன்படுத்துவதற்கு இடையூறாக உள்ளதா என்ற நடைமுறை சோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறான தடைகள் இல்லையென நிபுணர் குழு பரிந்துரைத்தால், சாதாரணமாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையின் கீழ் எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான புதிய சுற்றறிக்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வெளியிட்டுள்ளது.

## மலையகத்தில் நிச்சயம் மலரும்

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையக பல்கலைக்கழகம் நிச்சயம் மலரும் என்று தெரிவித்த அவர், பல்கலைக்கழக விவகாரத்தை வைத்து அரசியல் நடத்தாமல், அந்த மகத்தான பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மலையக இளைஞர், யுவதிகளின் நீண்ட நாள் எதிர்ப்பார்ப்பாக இருந்த மலையகத்துக்கான தனி பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான இறுதிக்கட்ட வேலைத்திட்டங்களுக்கான கலந்துரையாடல் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் கொட்டகலைக்கு வருகை தந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்றது.

கொட்டகலை ஆசிரியர் கலாசாலையை கேந்திரமாக கொண்டு பல்லைக்கழகத்தின் முதற்கட்ட தொகுதியை நிறுவுவதற்கும், மேலும் நிர்வாக ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செல்வதற்குமான இறுதிக்கட்ட கலந்துரையாடலாக இது அமையப்பெற்றது.

மேலும், பல்லைக்கழகத்தில் எந்தவிதமான பாடவிதானங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அரசு மற்றும் சர்வதேச ரீதியிலான உதவியுடன் இங்கு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை நடைபெற்றது.

அத்தோடு, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சர், பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கும் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கல்லூரியின் பீடாதிபதி மற்றும் மாணவர்களுடன் அமைச்சர் ஜீவன் தொண்டமானும், கல்வி அமைச்சரும் கலந்துரையாடினார்கள். கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்துக் கொண்டார்கள்.

இதன்போது கல்லூரிக்கு தேவையான விடயங்கள் தொடர்பில் மாணவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார். அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் உடனடி பணிப்புரையை வழங்கினார்.

இந்தச் சந்திப்புகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு, “பல்கலைக்கழகத்துக்கான அனுமதி பல்கலைக்கழகங்களுக்கான ஆணைக்குழுவிடம் இருந்து ஏற்கெனவே பெறப்பட்டிருந்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் பணிகள் ஸ்தம்பித்தன. இது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதியிடம் பேசினேன். கல்வி அமைச்சரிடமும் கலந்துரையாடினேன். இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

10 ஏக்கர் காணி உள்ளது. தேவையேற்படின் அங்கு இருக்கும் அரச காணிகளையும் பெறலாம். பல்கலைக்கழகம் அமைந்தே தீரும். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை என்றார்.

## தவிசாளர் மீது தாக்குதல்; மாஜி மாநகர சபை உறுப்பினர் மாயம்

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் அபிவிருத்தி சங்க கூட்டம் சனிக்கிழமை (08) இடம்பெற்றது.

இதில், திடீர் மரண விசாரணை அதிகாரியும் மத்தியஸ்த சபை தவிசாளருமான சீனி முஹமது தல்ஹா கலந்து கொண்டு இந்தப் பாடசாலையில் 1,800 மாணவர்களின் பெற்றோர்கள் இருக்கும் நிலையில், இந்தக் கூட்டத்திற்கு 35 பேர் மாத்திரம் கலந்துகொண்டுள்ளனர் என்றார்.

இந்தச் சங்கத்தின் பொருளாளர், கூட்டத்துக்கு சமூகமளிக்காத நிலையில் நிதி கணக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியாது என்பதுடன் அதிபருக்கு எதிரான முறைப்பாடு தொடர்பாக கல்வி அமைச்சில் அவருக்கு எதிராக விசாரணை இடம்பெற்றுவருகின்றது. இந்நிலையில் இந்தக் கூட்டம் நடத்துவது சட்டத்துக்கு முரணானது எனக் கருத்து தெரிவித்தார்.

இதன்போதே, கூட்டத்தில் கலந்து கொண்ட மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், மத்தியஸ்தர் சபை தவிசாளர் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து அவர் காயமடைந்தார்.

அக்கரைப்பற்று மத்தியஸ்த சபையில் கடன் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான முறைப்பாடு தொடர்பான விசாரணை கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது, எதிராளி மீது முறைப்பாட்டாளர் தாக்குல் நடத்திய சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டாளர் ஒருவரும் அவரது மகனான சட்டத்தரணி ஒருவர் உட்பட 3 பேரை கைது செய்தனர். அந்தச் சம்பவத்தின் எதிரொலியாக மத்தியஸ்தர் சபை தவிசாளர் மீது இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதில் தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் நகர சபை உறுப்பினர் தலைமறைவாகி உள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மேன்முறையீடுகள் இன்றுடன் நிறைவு

மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் (10) நிறைவடைய உள்ள நிலையிலேயே இந்த விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 8 இலட்சத்து 35 ஆயிரம் மேன்முறையீடுகளும் 11 ஆயிரத்துக்கும் அதிகமான ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டுக்கான புதிய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் மீண்டும் கோரப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## 74 இந்திய மீனவர்கள் கைது; 12 படகுகள் சிக்கின

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இந்திய மீன்பிடி படகுகளை விரட்டும் வகையில், இலங்கை கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு திணைக்களம் இணைந்து சனிக்கிழமை (08) இரவு விசேட நடவடிக்கையை மேற்கொண்டது.

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக்கு அப்பால் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய மீன்பிடி படகுகள் இரண்டும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி வெளிநாட்டு மீன்பிடி கப்பல்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினர் இலங்கை கடற்பரப்பில் வழமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் கடற்படை மற்றும் கடலோர காவல் துறையினர் தொடர்ந்து இதுபோன்ற சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று இலங்கை கடற்படை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ளது.

## நிதானமிழந்த டயானா; அகற்றுமாறு கோரிக்கை

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர், குறித்த நபரை மீண்டும் அழைத்து, இது தொடர்பாக விசாரிக்க, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த உரையாடலின் போது, இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நிதானம் இழந்து, அந்த நபரை மோசமான வார்த்தையில் திட்டியதாக கூறப்படுகிறது. சமூக ஊடகங்களில் பரவி வரும் ‘கிளிப்’ தற்போது இராஜாங்க அமைச்சருக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வருவதால், அந்தக் கிளிப்பை பரப்புவதில் இருந்து உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவரது அலுவலகம் பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## இந்திய விஜயத்தின் பின் ஒக்டோபரில் சீன விஜயம்

அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியை, எதிர்வரும் 21 ஆம் திகதி சந்திக்கவுள்ளார். ஜனாதிபதியாக பதியேற்று சரியாக ஒரு வருடத்தின் பின்னர், இந்தியாவுக்குச் செல்வது விசேட அம்சமாகும். அந்த விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை ஒக்டோபரில் மேற்கொள்ளவுள்ளார்.

சீனப் பயணத்தின் போது, புதிய முதலீடுகளைத் தேடுவது, வர்த்தக உடன்படிக்கைகளை எட்டுவது மற்றும் தடைப்பட்ட திட்டங்களுக்கான நிதியை மீண்டும் தொடங்குவது ஆகியவை தொடர்பில் கலந்துரையாடுவது ஜனாதிபதிகளின் முக்கியப் பணியாகும்.

கொழும்பு துறைமுக நிதி நகரத்திற்கான முதலீடுகளை விரைவுபடுத்துதல் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை-

**“ புதிய முதலீடுகளைத் தேடுவது, வர்த்தக உடன்படிக்கைகளை எட்டுவது, தடைப்பட்ட திட்டங்களுக்கான நிதியை தொடங்குவது தொடர்பில் கலந்துரையாடப்படும்**

கடவத்தை-மீரிகம பகுதிக்கான நிதியை மீள ஆரம்பிப்பது குறித்து எக்ஸிம் வங்கியுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை ஹம்பாந்தோட்டை பகுதியைச் சுற்றி, புதிய முதலீடுகளைத் தேடுதல் கலந்துரையாடல் பட்டியலில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒரு சுத்திகரிப்புத் திட்டத்தில் சீனா முதலீடு செய்வதும் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டு இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கருமாரியம்மனிடம் கைவரிசை

■ செ.திவாகரன் டி.சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா, மாகாஸ்தோட்டம் கீழ் பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் கோவில், சனிக்கிழமை (08) இரவு உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளது என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கோவிலின் பிரதான நுழைவாயில் கதவின் பூட்டை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள், கோவில் வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து, அதிலிருந்த பணத்தைத் திருடியுள்ளனர். உடைக்கப்பட்ட உண்டியலை கோவில் முற்றத்திலேயே விட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், வழக்கம் போல் ஞாயிற்றுக்கிழமை காலை கோவிலில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வந்த அக்கோவில் பூசகர், பிரதான கதவுப் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து கோவில் நிர்வாகத்திடம் முறைப்பாடு



செய்ததைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்துக்கு தெரிவித்துள்ளனர்.

ஸ்தலத்துக்கு விரைந்த நுவரெலியா பொலிஸார் மோப்ப நாய்களுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விரல் அடையாளயங்களையும் எடுத்துக்கொண்டனர்.

இதேவேளை, இதற்கு முன்னரும் இந்தக் கோவிலின் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த தாலி மணி, தங்க ஆபரணங்கள், கோவில் ஒலிபெருக்கி உபகரணங்கள், உண்டியல் காணிக்கை பணம் என்பன திருட்டு போயிருந்தமை தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இருந்ததாகவும் இருப்பினும் அது தொடர்பில் பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் கோவில் நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனினும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பிளாஸ்டிக்கால் விலங்குகளுக்கு பாதிப்பு

### வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்




■ க. அகரன்

பிளாஸ்டிக் பாவனையால் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படுவதால், இதைக் கட்டுப்படுத்தக்கோரிய விழிப்புணர்வு ஊர்வலம், நேற்று (09) வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

இந்து - பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலம், பூங்கா வீதியில் உள்ள பல்கலைக்கழக வெளிவாரி பிரிவுகள் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பித்து, நகர் வழியாக ஆரம்ப இடத்தை சென்றடைந்தது.

இதன்போது, வீதியோரத்தில் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள், ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களால் அகற்றப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் கடமைகளை

## அ. உமாமகேஸ்வரன் பொறுப்பேற்றார்



■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள அ. உமாமகேஸ்வரன், தனது கடமைகளை ஞாயிற்றுக்கிழமை (09) உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய க. விமலநாதன் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில், பதில் மாவட்ட செயலாளராக, மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த க. கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த அ. உமாமகேஸ்வரன், கடந்த வாரம் அமைச்சரவையால் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

நேற்று காலை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டதை தொடர்ந்து, மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அரச அதிபருக்கு பொன்னாடைகள் போர்த்தி, மாலைகள் அணிவிக்கப்பட்டு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. உரிய சுப நேரத்தில் அரசாங்க அதிபர் தன்னுடைய கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கங்கதலாவ ஐக்கிய

## ஊடக மன்றத்துக்கு ரீ-சேர்ட் அறிமுகம்

■ ஒலுமுதீன் கியாஸ்



திருகோணமலை மாவட்ட கங்கதலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் இரண்டாம் வருட பூர்த்தியை முன்னிட்டு, அங்கத்தவர்களுக்கு ரீ-சேர்ட் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கான நிதி அனுசரணையை கிண்ணியா எம்.எச்.எம் பௌண்டேஷன் வழங்கியிருந்தது. இதன் ஸ்தாபகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான முஸ்லிமின் ஹாஜியார் மஸாகிர், மேலங்கிகளை ஊடக மன்ற அங்கத்தவர்களிடம் சனிக்கிழமை (08) வைபவ ரீதியாக கையளித்தார்.

இதன் போது, ஊடக மன்றத்தின் சார்பாக, அதன் தலைவர் அமதுரு அமரஜீவயால் எம்.எச்.எம் பௌண்டேஷன் தலைவர் முஸ்லிமின் ஹாஜியார் மஸாகிருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## மல்வத்தையில் வரலாற்று கண்காட்சி

■ வி.ரி சகாதேவராஜா



'வரலாறு வாழ்வோடு இணைந்தது' எனும் தொனிப்பொருளிலான பாடசாலை மட்ட கண்காட்சி, மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன்கள் காட்சிப்படுத்தப்பட்ட இந்தக் கண்காட்சிக்கான முயற்சிகளை மேற்கொண்ட சமூக விஞ்ஞானத் துறையின் ஆசிரியை வினோ மற்றும் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

## கார் விபத்தில் ஐவர் படுகாயம்

■ நவி



கம்பளை -ஹெம்மாதகம பிரதான வீதியின் அம்புலுவாவ மூன்றாம் கட்டை பகுதியில் காரொன்று வீதியை விட்டு விலகி, சுமார் 100 அடி செங்குத்தான சரிவில் விழுந்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட ஐவர் காயமடைந்து ஹெம்மாதகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஹெம்மாதகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காரில் மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு சிறு பிள்ளைகள் பயணித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை, உலப்பனை பிரதேசத்தை சேர்ந்த குறித்த குழுவினர் கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து சனிக்கிழமை (08) பிற்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளான போது, ஹெம்மாதகம பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சுமனசேகர, அந்த வீதியால் கம்பளை நோக்கி வந்து கொண்டிருந்தார். விபத்துக்கு உள்ளானவர்களை கிராம மக்களுடன் இணைந்து, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்திருந்தார்.

## மதுபானசாலையை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

■ துவாரகஷான்



நுவரெலியா, டயகம நகரத்தில் புதிதாக திறக்கப்படவிருக்கும் மதுபானசாலைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், பாடசாலை மாணவர்களும் கறுப்பு ஆடைகளை அணிந்து, ஞாயிற்றுக்கிழமை (09) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நகரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, புதிதாக மதுபானசாலை திறக்கும் இடம்வரை பேரணியாகச் சென்றது. அவ்விடத்தில் கோஷங்களை எழுப்பி தமது கண்டனத்தனையும் தெரிவித்தனர்.

'புதிதாக திறக்கப்படும் மதுபானசாலை இங்கு வேண்டாம்', 'எங்களை வாழ விடுங்கள்', 'பிள்ளைகள் கல்வி கற்பதற்கு இடமளியுங்கள்', 'எங்களுடைய பெற்றோர்களை மதுவுக்கு அடிமை ஆக்குவதை நிறுத்திக் கொள்ளுங்கள்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

தேர்தல் காலங்களில் வரும் மலையக அரசியல்வாதிகள், எம்மைப் பாதுகாப்பதாக போலி வேஷம் காட்டி, எங்களுடைய தாய் - தந்தையர்களின் வாக்குகளை பெற்று, அரசியல் நாடகம் நடத்துகின்றனர். ஆகையால், தேர்தல் காலங்களில் மட்டுமே வராது, இதர நேரங்களிலும் வந்து எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## புத்தளத்தில் சர்வமத - வர்த்தகர்கள் சந்திப்பு

■ எம்.யூ.எம் சனூண்



இந்து, கத்தோலிக்க, பௌத்த, இஸ்லாம் சமயத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கும் புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கத்துக்கும் (PUTWA) புத்தளம் மாவட்ட சர்வ மத அமைப்புக்கும் (DIRC ) இடையிலான சந்திப்பு புத்தளம் பெரியபள்ளியில் நடைபெற்றது.

ஹஜ் பெருநாளை அனுஷ்டிக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற இச்சந்திப்பில், அருட்தந்தை யொஹான் தேவராஜா அடிகளார், கன்னியாஸ்திரிகளான ரட்னராஜா ரட்னமலர், மலர் லுவிஸ், இந்து குருக்களான சிவஸ்ரீ பாலநாத், சிவஸ்ரீ சுவீகர குருக்கள், மௌலவிமார்களான அஷ்ஷெய்க் முஜீப் ஸாலிஹ், அஷ்ஷெய்க் ஷிஹான் யூசுபீ ஆகியோர் கலந்துகொண்டு நல்லுபதேசங்களை வழங்கினார்கள்.

PUTWA தலைவர் வை.எம் நிஸ்தாத் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, அதன் கூட்டுனர் ஹிஷாம் ஹுஸைன், இச்சந்திப்பின் நோக்கத்தை விவரித்தார். DIRC இன் ஒருங்கிணைப்பாளர் திருமதி முஷ்னியா நன்றியுரை நிகழ்த்தினார்.

## போராளிகள் நலன்புரி சங்க அலுவலகம் திறப்பு

■ க. அகரன்




போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா அலுவலகம், நேற்று (09) வவுனியா தேக்கவத்தையில் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் போராளிகளின் நலன் சார்ந்து உருவாக்கப்பட்ட போராளிகள் நலன்புரி சங்கமானது, மாவட்ட ரீதியில் போராளிகள் அணுகக்கூடிய வகையில் அலுவலகங்களை திறக்கவுள்ளது.

இதன் ஓர் அங்கமாக, வவுனியா அலுவலகத்தை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திறந்து வைத்திருந்தார். இதன்போது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் போராளி சிவகுமாரன், விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப தமிழ் செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட்ட போராளிகளிகளுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் அரசியல் கைதியான ச. அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவநாதன் கிசோர், முன்னாள் போராளிகள், எழுத்தாளர் மேழ்குமரன் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு ஆளுநரின் சர்வதேச விவகார

## இணைப்பு செயலாளராக ஏ.எல்.எம்.லாபீர் நியமனம்



■ ஹஸ்பர்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் சர்வதேச விவகாரங்களுக்கான இணைப்பு செயலாளராக சட்டத்தரணி ஏ.எல்.எம் லாபீர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை சனிக்கிழமை (08), திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து, ஆளுநர் வழங்கி வைத்தார்.

கிண்ணியாவை சேர்ந்த ஏ.எல்.எம் லாபீர், இலங்கை வெளிவிவகார செயலகத்தில் 25 வருடம் சேவையாற்றி உள்ளதோடு தாய்லாந்து, கனடா, சவுதிஅரேபியா ஆகிய நாடுகளில் இராஜதந்திரியாகவும் செயற்பட்டுள்ளார். இறுதியாக அவர் ஜோர்தான் நாட்டில் இலங்கைக்கைகான தூதுவராக நான்கு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

முல்லைத்தீவில் 23,901 குடும்பங்கள் சமுர்த்தி பெற்றநிலையில்

## சமூக நலன்புரி திட்டத்தில் 16,211 குடும்பங்கள் மாத்திரம் உள்ளீர்ப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், 23,901 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளாக சமுர்த்தி பெற்றுவந்த நிலையில், அமல்படுத்தப்பட உள்ள சமூக நலன்புரி திட்டத்தில் 7,690 குடும்பங்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

வறுமை நிலையில், முதலிடத்தில் உள்ள மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில், தற்போது 44,000 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், ஏற்கெனவே 23,901 குடும்பங்கள் சமுர்த்தியை பெற்றிருந்தார்கள். ஆனால், தற்பொழுது அமல்படுத்தப்படவுள்ள சமூக நலன்புரி திட்டத்தில் 16,211குடும்பங்களின் பெயர்கள் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன.

சமூக நலன்புரி திட்டத்தில், 7,690 குடும்பங்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதாவது, இத்திட்டத்தைப் பெறக் கூடிய தகுதியுடைய பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்கள் எனப் பலர் நலன்புரித்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டியவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறனவர்கள், தமது மேன்முறையீட்டு விண்ணப்பங்களை, பெரும் சிரமங்களுக்கு மத்தியில் செய்து வருகின்றனர்.

## திருமணத்துக்கு செல்வதை தடுத்ததால் மாணவி சடலமாக மீட்பு

திருமண வீட்டிற்கு செல்ல விடாமல் தடுத்து நிறுத்திய 13 வயது மாணவியின் சடலம், குளியலறையில் இருந்து மீட்கப்பட்டதாக அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண், அகலவத்தை பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட வயங்கல்ல பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய பாடசாலை மாணவி என்பதுடன், அளுத்கம, அட்டாலுகம பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.

விடுதியில் இருந்து தனது வீட்டிற்கு திரும்பிய மாணவி, எதிர்வரும் நாளில் நடைபெறவுள்ள திருமணத்தில் தானும் கலந்து கொள்ள விரும்புவதாக தனது தாயாரிடம் கூறியுள்ளார். அதில் மகள் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும், அன்றைய தினம் விடுதிக்கு சென்று பள்ளிக்கு தயாராகும் படியும் மகளை தாய் எச்சரித்துள்ளார். அன்றிரவு, மாணவி கழிவறைக்குச் சென்று நீண்ட நேரம் திரும்பாததால், குளியலறையின் கதவை உடைத்து பார்த்தபோது, மாணவி சடலமாகக் கிடந்துள்ளார்.


**வேலை வாய்ப்பு**

- காவலாளி (ஆண், பெண்)
- சாரதிகள்
- பராமரிப்பு பணியாளர்கள்

**The Beach Park**
**Port City**
**WhatsApp: - 075 7000500**
e-mail: thebeachpark@gmail.com

# புதிதாக முளைக்கும் மதுக்கடைகளும் நாட்டின் 'குடி'களும்

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைக் குறிவைத்து, அடுத்தாக திட்டங்களைத் திணிப்பதில் பெரும்பான்மை அரசாங்கம் கைதேர்ந்ததாகத் தன்னைக் காண்பித்து வருகின்றது. சனப்பரம்பலை சீர்குலைப்பதில் இருந்து, மக்களைப் பாதிக்கக்கூடிய திட்டங்கள் வரை, அடுக்கிக்கொண்டே போகலாம். அவ்வாறான பிரதேசங்களில், முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக, மக்கள் பெற்ற பயன்களைத் தேடினாலும் கிடைக்காது.

அந்த வகையில்தான், அம்பாறை- மல்வத்தை கிராமத்தில், மன்னார் நகரில், கிளிநொச்சி - முழங்காவிலில், நுவரெலியா - டயகமவில் புதிதாக மதுபான சாலைகளை திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிட்ட அத்தனை பிரதேசங்களிலும், புதிதாக திறக்கப்பட இருக்கும் மதுபானசாலைகளுக்கு எதிராக, பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் பாடசாலை மாணவர்களும் ஒன்று திரண்டு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் மதுபானசாலைக்கு, கிளிநொச்சி நீதிமன்றத்தால் வியாழக்கிழமை (06) முதல் 14 நாள்கள் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேசங்களில், புதிய மதுபான சாலைகளுக்கு எதிராக, இதுவரையிலும் எவருமே நீதிமன்றத்துக்குச் செல்லவில்லை.

உயரிய சபையில் அங்கம் வகிக்கும் பலரிடமும், ஏனைய சபைகளில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகள் சிலரிடமும் மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரம் உள்ளமை தொடர்பில், கடந்தகாலங்களில் பரவலாக விவாதிக்கப்பட்டது. மதுபான விற்பனையின் ஊடாக, அரசாங்கத்துக்கு கிடைத்த வருமானம் குறைந்துள்ளது என அறிவிக்கப்பட்ட ஒருசில நாள்களுக்குள் மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இந்நிலையில், மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் புதிதாக திறக்கப்படவுள்ள மதுபானசாலைகளுக்கு எதிராக, நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தால் இடைக்கால தடையுத்தரவை பெற்று, மக்களின் நியாயமான கோரிக்கையை வென்றெடுத்திருக்கலாம்.

மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டதன் பின்னர், சட்டவிரோதமான மதுபான பாவனை அதிகரித்துள்ளது. அதுமட்டுமன்றி, மதுபானசாலைகளுக்கு முன்பாகத் திரண்டிருப்பவர்களின் எண்ணிக்கையில் குறைவில்லை. ஆக, அரசாங்கத்துக்கான வருமானம் கிடைத்துக்கொண்டுதான் இருக்கின்றது.

'ஒரு நாட்டு குடிமக்களின் பொருளாதார நிலை உயர்ந்தால், அந்நாட்டு அரசனின் நிலை உயரும்' என்பதைத்தான், 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான்' என்ற ஔவையார் மிக நுணுக்கமாகத் தனது வரிகளில் குறிப்பிட்டுள்ளார். 'குடி உயர கோன் உயரும்' என்ற ஔவையின் சொல் இன்றும் பொருத்தமாக இருக்கிறது.

ஆனால், பொருள்தான் சற்று மாறியிருக்கிறது. 'குடி' என்பது குடிமக்களை இன்று குறிக்கவில்லை. கெடுக்கும் 'குடி'யைத்தான் குறிக்கிறது. குடிப்பவர்களின் எண்ணிக்கையும், குடியின் அளவும் அதிகரிக்க, அதிகரிக்க அரசின் வருவாய் உயர்கிறது. ஆனால், மக்கள் பாதிக்கப்பட்டு, குடும்பம் சீரழிந்து சமூகமே சின்னாபின்னமாகி விடுகின்றது என்பதை, மக்கள் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்வது அவசியம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஏது வாழ்வு? வீரர்கள் மரிப்பதில்லை. தினம் தினம் வீழ்ந்தும் உக்கிரமாக எழுந்திடுவார்கள். பயந்து வாழ்பவனுக்கு ரோசம் கிடையாது. நியாயங்களைத் தட்டிக் கேட்கத் துணிச்சல் வேண்டும்.

துணிந்தவனுக்குத் தொய்வும் இல்லை; தோல்வியும் கிடையாது. எனது நாடு; எனது இனம் என்பதற்காகப் போராடுபவருக்குப் பின்னால் செல்பவர்களைவிட, டாம்பீகமாகவும் தவறான முறையிலும் செல்வம் தேடுபவர்களுக்குப் பின்னால் திரிகின்றவர்கள்தான் அதிகம்.

நியாயத்தைப் பேசுபவர்களை வாழத்தெரியாதவர்கள் என்கின்றனர். அடிமை வாழ்வே சகஜமாகி விட்டது. மனிதன், செயலாற்றுவதற்கே பிறந்தவன்; செத்துப்போவதற்கல்ல! மக்களை மறந்தவன், வாழும் உரிமையை இழக்கிறான்.

விலங்குகள், பறவைகள் கூட, மனிதர்களை விட சுதந்திரமாக வாழுகின்றன. ஆனால், நாம் அக்கம்பக்கம் பார்த்துப் பேச வேண்டியுள்ளது. எவராவது 'பத்தவைத்து' விடுவாரோ என அஞ்சவேண்டியுள்ளது.

உண்மைகளைத் துணிச்சலுடன் பேசுக! பொய்யர்கள்தான் மறைந்து நின்று பயத்துடன் பேசுகின்றார்கள். சுதந்திரம் நமக்கு எப்போது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

இலங்கை அரசியல்: பாதிக்கப்பட்ட மனநிலையில் இருந்து

# வெளிவருவதற்கான தேவை!



என். கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

இன மோதல்களுக்குப் பிறகு, பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் சமூகங்கள் மத்தியில் ஒரு முக்கிய உளவியல் எதிர்வினையாக 'பாதிக்கப்பட்ட மனநிலை' (*victimhood mentality*) வெளிப்படுவதை உலகளவில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மோதல்களுக்கு பின்னரான இன முரண்பாட்டுக்கான தீர்வில், இந்தப் பாதிக்கப்பட்ட மனநிலை பெரும் தாக்கத்தைச் செலுத்துவதை அவதானிக்கலாம். பாதிக்கப்பட்ட சமூகத்தின் எதிர்கால அரசியல் பாதைகளைத் தீர்மானிப்பதிலும், இந்தப் பாதிக்கப்பட்ட மனநிலையின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றிப் பேச வேண்டிய தேவையும் நிறையவே இருக்கிறது.

ஆனால், இந்த இடத்தில் ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. இலங்கையின் இனவாத அரசியலால், தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. தமிழ் மக்கள், தங்கள் உயிர்கள், வாழ்விடங்கள், கலாசாரம், நம்பிக்கைகள், அடையாளங்கள், வாழ்வியல், சமூக- வாழ்வாதாரக் கட்டமைப்பு என எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய், அகதிகளாக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிதறுண்டு வாழ்கிறார்கள். அதற்குக் காரணம், இலங்கையின் இனவாத அரசியல் என்பதும் உண்மை.

இந்த உண்மைகள், தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை ஆணித்தரமாக வெளிப்படுத்துகின்றன. ஆகவே, தமிழ் மக்கள் இலங்கையின் இனவாத அரசியலால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை மறுப்பதற்கு எவராலும் முடியாது. அப்படியானால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட மனநிலையில்தான் இருப்பார்கள்?

இதில் என்ன பிரச்சினை என்ற கேள்வி எழலாம். இது நல்ல கேள்வியும் கூட! 'வீழ்ந்தோம் என்பது இழுக்கல்ல; வீழ்ந்து கிடந்தோம் என்பதே இழுக்கு'. ஆகவே வீழ்ந்ததற்கும் சேர்த்து எழ வேண்டுமென்றால், பாதிக்கப்பட்ட மனநிலையில் தொடர்ந்து இருப்பதைப் பற்றி யோசிக்கவும் வேண்டும்.

மறுபுறத்தில், இலங்கையின் பெரும்பான்மை சமூகமும் 30 வருட யுத்தத்தில் நிறைய இழந்திருக்கிறது. அவர்களும் தங்களைப் பாதிக்கப்பட்டவர்களாகவும் பார்க்கிறார்கள். யுத்தத்தை வெற்றி கொண்டவர்களாகக் கொண்டாடினாலும், 30 வருட யுத்தம் தந்த வடுக்கள், அவர்களிடம் அச்சத்தை வேரூன்றச் செய்துள்ளது. 30 வருட யுத்தத்தில், நிறையவற்றை இழந்துள்ள சமூகமாக அந்தப் 'பாதிக்கப்பட்ட மனநிலை' அவர்களுக்குள்ளும் இருக்கிறது.

பெரும் பாதிப்பை அனுபவிப்பது என்பது, ஒரு நியாயமான மற்றும் தார்மிக இடமாக, உலகத்தைப் பற்றிய நமது அனுமானங்களை சிதைப்பதாக அமைகிறது. ஒருவர் பாதிக்கப்பட்டவராக தன்னை முன்னிறுத்துவதும், அதற்கான அங்கிகாரத்தை வேண்டுவதும், தான் அனுபவித்த பாதிப்புக்கான ஒரு சாதாரண பிரதிபலிப்பாகும். அவர், இந்த உலகம் நியாயமானதும் தார்மிகமானதுமான இடம் என உணர்வதற்கும், அதனை மேலும் ஏற்றுக்கொள்ளத் தொடங்குவதற்கும் இந்த அங்கிகாரம் அவசியமாகிறது.

மேலும், பாதிக்கப்பட்டவர்கள், தமது பாதிப்புக்குக் காரணமானவர்கள், தங்கள் தவறுக்கு பொறுப்பேற்க விரும்புவதும், அவர்கள் குற்ற உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என எண்ணுவதும் இயல்பானது. இதனால்தான் பெரும் மோதலுக்குப் பின்னரான இனமுரண்பாட்டுத் தீர்வில் உண்மை, பொறுப்புக்கூறல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

இனமோதல், போர் என்பன சமூகங்கள் மீது ஆழமான வடுக்களை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலும் நீடித்த அதிர்ச்சியையும் வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன.

பாதிக்கப்பட்ட மனநிலைக்கு, பல்வேறு காரணிகள் கூறப்படலாம். நேரடி அல்லது மறைமுக வன்முறை, இடப்பெயர்வு, இழப்பு போன்ற அனுபவங்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற தனிநபர்களின் உணர்வை ஆழமாக வடிவமைக்கும். இன மோதலின் போது, தாங்கப்பட்ட துன்பத்தின் அளவு, நீதியான, நியாயமான நிவாரணத்துக்கான தேவையை தீவிரப்படுத்துகிறது என்பதோடு, பாதிக்கப்பட்ட கதையை வலுப்படுத்துகிறது.

மேலும், தலைவர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க குழுக்களால் பாதிக்கப்பட்டவர்களை அரசியலாக்குவது பாதிக்கப்பட்ட மனநிலையை மோசமாக்குகிறது. அரசியல் நடிகர்கள், தமக்கான ஆதரவைத் திரட்டுவதற்கு குறித்த சமூகம் அனுபவித்த கூட்டு அதிர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதிகாரத்தையும் செல்வாக்கையும் தக்க வைத்துக் கொள்ள, இனவெறுப்பையும், பாதிக்கப்பட்ட மனநிலையையும், மக்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டியதையும் ஊக்குவிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டமொன்றை இவ்வாறு கையாளுதல், பிளவுகளை ஆழமாக்குகிறது; குணப்படுத்துதல், நல்லிணக்க செயல்முறைக்கு குந்தகமாக அமைகிறது. பாதிக்கப்பட்ட மனநிலை பெரும்பாலும் மற்ற குழுவுடன் எதுவித சமரச பேச்சுவார்த்தைகளிலோ, விட்டுக்கொடுப்புகளிலோ ஈடுபட மறுப்பதில் வெளிப்படுகிறது. கூட்டுப் பழிவாங்கல் உணர்வை நிலைநிறுத்துகிறது.

இதனால் சமூகங்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்கின்றன. பாதிக்கப்பட்ட அடையாளத்தைச் சுற்றி மட்டுமே தமது அரசியலை நிர்மாணிக்கின்றன. அதைத்தாண்டிய எந்த அரசியல் நடவடிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாத மனநிலை அந்தச் சமூகத்தில் உருவாகிறது.

ஒரு வகையில், அந்தச் சமூகம் தனக்குள் தானே, 'பாதிக்கப்பட்ட மனநிலை'யுடன் தன்னை தனிமைப்படுத்திக்கொள்கிறது. இந்தத் தனிமை, நல்லிணக்க செயல்முறையைத் தடுக்கிறது; குழுக்களிடையே உரையாடல் மற்றும் புரிதலைத் தடுக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட சமூகம் மேலும் பாதிப்புகளைச் சந்திக்கிறது.

முன்னர் குறிப்பிட்டதைப் போல, பாதிக்கப்பட்ட மனப்பான்மையை மையப்படுத்திய அரசியலானது, நீண்டுநிலைக்கத்தக்க அமைதியைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்க முயற்சிகளுக்கு பெரும் சவாலாக அமைகிறது.

முதலாவதாக, பாதிக்கப்பட்டவர்களின் அரசியல், பாதிக்கப்பட்ட மனநிலைக்குள் சிறைப்பட்டுக்கொள்ளும் போது, அது முரண்பட்ட குழுக்களிடையே பச்சாத்தாபம் மற்றும் புரிதலின் வளர்ச்சியைத் தடுப்பதுடன் பிளவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. இது சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் துன்பங்களையும் அனுபவங்களையும் ஒப்புக் கொள்ளும் ஒரு பகிரப்பட்ட கதையை உருவாக்குவதைத் தடுக்கிறது.

இரண்டு சமூகங்கள் முரண்பட்டு நிற்கும் ஒரு நாட்டில், அந்தந்த சமூகங்கள் தமக்குள் தாமே, 'பாதிக்கப்பட்ட சமூகமாக' அதே மனநிலையில் தமது கதையை வடிக்கும் போது, ஒவ்வொரு சமூகத்தின் கதையிலும், அந்தச் சமூகம் பாதிக்கப்பட்ட அப்பாவியாகவும், மற்றைய சமூகம் பாதிப்பை ஏற்படுத்திய வில்லனாகவும் சித்திரிக்கப்படும். இது முரண்பாட்டுக்குத் தீனிபோட்டு வளர்க்குமேயொழிய, முரண்பாட்டுக்கான தீர்வுக்கு வழிவகுக்காது.

பாதிக்கப்பட்ட மனநிலை, அரசியல் ஆதாயங்களுக்காக பலியாவதை கருவியாக்க வழிவகுக்கும். சூழ்ச்சியில் சிறந்த இனவாத அரசியல்வாதிகள், இந்த மனநிலையைப் பிரிவினையை வளர்ப்பதற்கும் மோதலின் சுழற்சியை நிலைநிறுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்வார்கள். அதையும் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நாமே பாதிக்கப்பட்டவர்கள் என்ற ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல்மயமாக்கல், உண்மையான நல்லிணக்க முயற்சிகளைத் தடுக்கிறது. அத்துடன், நீண்ட கால அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளையும் சிதைக்கிறது.

மேலும், போருக்குப் பிந்தைய இன மோதல்களில் பாதிக்கப்பட்ட மனப்பான்மை, சமூக மீள்கட்டமைப்பு மற்றும் உளவியல் மீட்சியைத் தடுக்கலாம். பாதிக்கப்பட்டவர்களை, "நீங்கள் பாதிக்கப்பட்டவர்கள்" என்று தொடர்ந்து வலியுறுத்துவதன் மூலம், தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் தங்கள் அதிர்ச்சிகரமான கடந்த காலத்தைத் தாண்டி, தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்படும். இதுதான் இலங்கை அரசியலில் இன்று நடந்துகொண்டிருக்கிறது.

போருக்குப் பிந்தைய, இனமோதல் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட மனநிலையைக் கடப்பது, ஒரு சிக்கலான பணியாகும். அதற்கு பல்வேறு தளங்களில் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை. முதலாவதாக, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் அனுபவங்களையும் துன்பங்களையும் அங்கிகரிப்பதும் சரிபார்ப்பதும் முக்கியம். இதில் இரு தரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களை அங்கிகரிப்பது மற்றும் அவர்களின் கதைகளைக் கேட்க உரிய தளங்களை வழங்குவது என்பன முக்கியமானவை.

பாதிக்கப்பட்ட மனநிலையை எதிர்கொள்வதில் உரையாடல் மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை எளிதாக்குவது இன்றியமையாதது. உண்மையான மற்றும் அனைத்துத் தரப்பையும், அவர்களது அனுபவங்களையும் உள்ளடக்கிய உரையாடல்களை வளர்ப்பதன் மூலம், தனிநபர்களும் சமூகங்களும் மோதலின் சிக்கல்கள் பற்றிய ஆழமான புரிதலை வளர்ப்பதுடன், பகிரப்பட்ட அனுபவங்களை அங்கிகரிக்க முடியும்.

ஒரு சமூகத்தின் அனுபவத்தை அங்கிகரிப்பது என்பது, இதில் மிக முக்கியமானது. மேலும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமத்துவமின்மைகளை நிவர்த்தி செய்வது, பாதிக்கப்பட்ட மனநிலையை கடக்க இன்றியமையாதது. அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாடு, சமவாய்ப்புகளை ஊக்குவிப்பது விளிம்புநிலைக் குழுக்களுக்கு அதிகாரத்தைப் பகிர வழிசெய்தல் என்பவையும் மிக முக்கியமானவை.

பாதிக்கப்பட்ட மனநிலையில் இருந்து ஒட்டுமொத்த இலங்கையும் வெளிவரவேண்டுமென்றால், அதைச் செய்வதற்கு உளவிருப்புடைய அரசாங்கமொன்று வரவேண்டும்.

அப்படி வரும் வரை, பாதிக்கப்பட்ட மனநிலையில் இருந்து இலங்கையின் சமூகங்களை மீட்டெடுப்பது சவாலானதாகத்தான் இருக்கப்போகிறது.

## கடிதங்கள்

கிளிநொச்சி, பொன்னகரில்

### உள்ளூர்வாசிகள் புறக்கணிக்கப்பட்டு காணிகள் வழங்கல்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொன்னகர் பகுதியில், சுமார் 98க்கு மேற்பட்ட குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றியும் வாழ்விட வசதிகள் இன்றியும் வாழ்ந்து வரும் நிலையில், குறித்த பிரதேசத்தில் வெளியாட்களுக்கு காணி வழங்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதாக பிரதேச பொது அமைப்புகளும் பொது மக்களும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

சொந்தக் காணிகள் இல்லாத காரணத்தால் 98 குடும்பங்களும் நிரந்தர வீட்டுத் திட்டங்களையோ அல்லது மலசலகூட வசதிகளையோ, குடிநீர் இணைப்புகளையோ பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும், வாழ்விட வசதிகள் இன்றியும் நீண்ட காலமாக வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த பகுதியில் உள்ள காணிகள், நாளாந்தம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கும் இலகுவாக வழங்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் உள்ள மேற்படி 98க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு, காணிகளை வழங்க கோரியும் வெளியாட்களுக்கு காணிகள் வழங்கப்படுவதை நிறுத்தக் கோரியும் பிரதேச மக்கள், பொது அமைப்புகள் என்பன இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், தமக்கு காணிகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருக்கிறார்கள்.

யது பாஸ்கரன்

# மண்ணின் கலைவாசம்



சந்திரகுமார் யதுஷினி
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்பாண பல்கலைக்கழகம்



**கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்ட கல்முனை பிரதேசத்தில், சேனைக்குடியிருப்பு கிராமம் உள்ளது. செந்நெல் விளையும் வயல்களும் வற்றாத கிட்டங்கி வாவியும் சூழ்ந்த இக்கிராமத்தில், கால ஓட்டத்தில் கலை வடிவங்கள் மருவிவிட்ட நிலையிலும் அதில் சிறந்து விளங்கியவர்களுடைய பசுமையான கலை அனுபவம் மனதை தொட்டுச் செல்கிறது.**

சேனைக்குடியிருப்பு கிராமத்தில் பாடல்களை கட்டிப்பாடுவதில் சிறந்து விளங்கும் வைரமுத்து கணேஷ், சேனைக்குடியிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கிய நாள்களில் இருந்தே கலைத்துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்திருக்கின்றார்.

“என்னுடைய தந்தை வைரமுத்து அவர்கள், கூத்துக் கலையில் சிறந்தவர். கூத்துகளில் பங்குபற்றி பலரது பாராட்டுகளையும் பெற்றிருந்ததோடு, தனக்குப் பிடித்த யாரையாவது கண்டால் அவருக்கு பொருத்தமான பாட்டை உடனே பாடிவிடும் தன்மை கொண்டவர். எனது தாத்தா ஆண்டிப்பிள்ளை அவர்கள், கூத்துக்கலையில் வல்லவர்” என்று, தன்னுடைய கலை வாழ்க்கையின் பின்னணி பற்றி குறிப்பிடும் கணேஷ், அன்றைய காலங்களில் கலைகளில் சிறந்து விளங்கிய புலவர் விநாயகமூர்த்தி அண்ணாவியார், அரசரத்தினம் போன்றவர்கள் கலை நிகழ்வுகளுக்காக பயிற்றுவிக்கின்ற வசந்தன் கோலாட்டம் போன்றவற்றில் பங்குபற்றி அவர்களுடைய பாராட்டுகளைப் பெற்றமையே, அவருக்குள் கலைத்துறையில் சாதிக்கவேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது என மனம் நெகிழ்கிறார்.

1975 ஆம் ஆண்டு முதல் மேடை நாடகங்களில் நடித்த இவர், இதற்கு பிற்பட்ட காலங்களில் அவரே மேடை நாடகங்களை எழுதி நடிகர்களை கொண்டு பயிற்றுவித்து மேடைகளில் அரங்கேற்றியும் இருக்கின்றார். வில்லுப்பாட்டு, நாட்டுக் கூத்து, கவிதை நாடகம், வள்ளி திருமணம் என நீண்டு செல்லும் இவரது கலைவடிவங்களிலுள்ள பாடல்கள், சேனைக்குடியிருப்பு மக்களின் கிராம வாழ்வியல், போர்ச்சூழல், அரசியல் பிரச்சினைகள், தனிநபர் பிரச்சினை என்பவற்றை பேசுவதாக அமைந்திருந்தன.

> **கலைவடிவங்களை பழக்குவதற்கும், பயிற்றுவிப்பதற்கும் தயாரிப்பதற்கும் கலைஞர்கள் இருந்தால் மட்டும் போதாது, பங்கேற்பாளர்களும் அக்கலையை வரவேற்பதற்கு பார்வையாளர்களும் இன்றியமையாதவர்களாவர்**

கலைஞர்களை பழக்கி, அரங்கேற்றி மக்கள் மத்தியில் பாராட்டுகளையும் பரிசுகளையும் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக மாற்றத்தையும் ஏற்படுத்திய கலைவடிவங்கள் காலப்போக்கில் கலையிழந்தமையால் எண்சீரடிப்பத்து காவியம், கும்மிபாடல்கள் ஊஞ்சல் பாடல்கள், அகவல் வரலாற்று நூல்கள் போன்றவற்றை எழுதி, சிறு சிறு நூலாக்கி கோவில் திருவிழாக்காலங்களில் அனைவரது கைகளுக்கும் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, கணேஷின் கலையார்வம் வெறும் புத்தகப்பக்கங்களுக்குள் தற்காலத்தில் வரையறுக்கப்பட்டு, பாடல்களை மட்டும் சில நிகழ்வுகளுக்காக கட்டுருவாக்கம் செய்கின்ற நிலையில் இருக்கின்றார்.

கலைவடிவங்களை பழக்குவதற்கும், பயிற்றுவிப்பதற்கும் தயாரிப்பதற்கும் கலைஞர்கள் இருந்தால் மட்டும் போதாது; அதில் பங்கேற்று நடிப்பதற்கு பங்கேற்பாளர்களும் அக்கலையை வரவேற்பதற்கு பார்வையாளர்களும் இன்றியமையாதவர்களாக காணப்படுகிறார்கள். காலம் செல்லச்செல்ல ஏற்பட்ட மாற்றங்களால் இதில் பங்குதாரர்களாக இருந்த பங்கேற்பாளர்கள் தொழில் நிமித்தம் கடல் கடந்து தூரதேசங்களுக்குச் சென்றமை, பார்வையாளர்களுடைய ஆர்வமின்மை, நேரமின்மை போன்ற காரணங்கள், இவர் போன்ற பலருடைய கலை ஆர்வத்தையும் கலை வடிவத்தையும் வெறும் புத்தக எழுத்துகளோடு மாத்திரம் நிறுத்திவிடுவதற்கு வழிசமைத்து விட்டன.

தற்காலத்தில் சேனைக்குடியிருப்பில் ஆய்வுகளுக்கு கலைவடிவங்களைத் தேடிச் செல்லும்போது மட்டுமே, இவர் போன்ற கலைஞர்களுடைய பெயர்கள் உச்சரிக்கப்படுவதோடு இவர் போன்ற ஏனையவர்களுடைய கருத்துப் பகர்வுகளும் சேனைக்குடியிருப்பிலும் கலைவடிவங்கள் இருந்திருக்கின்றன என்பதையும் பறைசாற்றி நிற்கின்றன.

நமது கிராமத்திலும் கலை வடிவங்கள் இருந்ததா? பரவாயில்லையே! நமது ஊரிலும் கலைகள் இருந்திருக்கின்றதே! என வியப்பாக கதைத்துவிட்டு கடந்து செல்லும் சமுதாயத்தின் மத்தியில், இத்தகைய கலைஞர்களுடைய கலைத்தாகம் பற்றி சரியான புரிந்துணர்வு இல்லாதவரை கலைவடிவங்கள் பேசுபொருளாக மாறாது.





# யுனிசெப் ஸ்ரீ லங்கா வர்த்தக சபை ஆரம்பிப்பு

நாட்டில் சிறுவர் உரிமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் யுனிசெப் அமைப்புக்கும், முன்னணி வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு இடையில் மூலோபாயக் கூட்டாண்மையை ஏற்படுத்தி வர்த்தக சபையொன்றை யுனிசெப் ஆரம்பித்துள்ளது.



இந்த வர்த்தக சபையானது சிறுவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கும், இலங்கையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளையோரின் நலன்களுக்காகவும் செயற்பட அர்ப்பணிப்புடன் இருக்கும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய தனியார் துறையிலுள்ள பிரமுகர்கள் அடங்கிய குழுவை ஒன்றிணைக்கும். தெரிவு செய்யப்பட்ட வணிகத் தலைவர்கள் வர்த்தக சபையில் தமது நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை விடவும் தனிநபர்களாகப் பிரதிநிதித்துவம் வழங்குகின்றனர்.

சிறுவர் மற்றும் இளையோர் தொடர்பான நிலைமைகளை மேம்படுத்துவதற்கான உத்திகள், முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு வர்த்தக சபையின் உறுப்பினர்கள் அவ்வப்போது ஒன்றுகூடுவார்கள்.

அவர்களின் நிபுணத்துவம், தலைமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பில் நிரூபிக்கப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவை புதுமையான தீர்வுகள், பகரப்பட்ட மதிப்புகளின் உருவாக்கத்துக்கு வழிவகுக்கும்.

“வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு உடனுழைப்புடன் கூடிய தளத்தை உருவாக்கும் நோக்கில் யுனிசெப் ஸ்ரீலங்கா வர்த்தக சபையை ஆரம்பிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்” என யுனிசெப் ஸ்ரீலங்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்தார்.

“இந்தச் சபையின் ஊடாக, இலங்கையிலுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தனியார் துறையின் சக்தியைப் பயன்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது” என்றார்.

வணிகத் தலைவர்கள், தொழில்துறை அமைப்புகள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளடங்கலாக பரந்துபட்ட பங்குதாரர்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்துவதையும், தனியார் துறையுடன் இணைந்து செயற்படுவதையும் யுனிசெப் அதிகரித்துள்ளது. சிறுவர் உரிமைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறையில் உள்ள வணிக மாதிரிகளில் உள்ளடக்குவதன் மூலம், சிறுவர்களை முதலிடத்தில் வைத்து நாம் எதைச் செய்கின்றோமோ அதன் ஊடாக உரிய அளவையும், நிலைபேறு தன்மையையும் அடைவதை யுனிசெப் இலக்காகக் கொண்டுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வில் வர்த்தக சபையின் உறுப்பினர்கள் சார்பில் உரையாற்றிய ஹேமாஸ் ஹோல்டிங் பிஎல்சி நிறுவனத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் தெரிவிக்கையில், “சிறுவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்துவதற்கும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நாம் கூட்டாக அங்கிகரிக்கின்றோம். ஒரே மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்ட தலைவர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து இறுதி இலக்கை அடைவதற்கு யுனிசெப் வர்த்தக சபை சிறந்த தளமொன்றை அமைக்கும்” என்றார்.

# Microsoft Imagine Cup 2023 இறுதிப்போட்டிக்கு தெரிவானோர்

## அமெரிக்க தூதுவருடன் சந்திப்பு



Microsoft Imagine Cup 2023இன் உலக இறுதிப் போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்கள், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ ஜே. சங் உடன் சந்திப்பை மேற்கொண்டனர். Microsoft அலுவலகத்துக்கு தூதுவர் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த போது, இந்தச் சந்திப்பு நடைபெற்றது. Sipsara மற்றும் The Green Tycoon ஆகிய அணிகள், Microsoft Imagine Cup 2023 போட்டியில் இலங்கை சார்பாக போட்டியிட தெரிவாகியிருந்தன. புவி, கல்வி, சுகாதாரம், வாழ்க்கைமுறை ஆகியன தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் காணப்படும் பெருமளவான பிரச்சினைகளுக்கு மாணவர்களால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்வு காண்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டித் தொடர் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அணியினருடன் சந்திப்பை மேற்கொண்டிருந்த போது, சமூகத்துக்காக அவர்களின் சிந்தனைப் பங்களிப்பால் எய்தக்கூடிய பயன் தொடர்பில் பாராட்டுதல்களையும் தெரிவித்திருந்தார்.

Microsoft தென் கிழக்கு ஆசியா புதிய சந்தைகள் (SEA NM) பொது முகாமையாளர் சூக் ஹுன் சீஹா மற்றும் Microsoft ஸ்ரீ லங்கா மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் ஹர்ஷ ரந்தெனி ஆகியோர் அமெரிக்கத் தூதுவர் சங்கை வரவேற்றிருந்தனர்.

தொழில்நுட்பம்சார் புத்தாக்கம் தொடர்பில் காணப்படும் எல்லைகளை மறுசீரமைத்து, ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தி, கல்வி மற்றும் புவி ஆகிய பிரிவுகளில் இலங்கையின் இரண்டு அணிகளும் போட்டியிட்டிருந்தன. Sipsara அணியால் மனநலிவு நோய் காணப்படும் சிறுவர்கள் மத்தியில் திறன்களை அளவிடல் மற்றும் கட்டியெழுப்பலுக்கு பயன்படக்கூடிய இணைய அடிப்படையிலான அப்ளிகேஷன் ஒன்று வடிவமைக்கப்பட்டிருந்தது.

The Green Tycoon அணியால், காபன் வெளியீட்டை தணிப்பது, காபன் வரிகளைக் குறைப்பது மற்றும் பசுமையை ஊக்குவிக்கும் வகையில் காபன் வெளியீட்டை கண்காணிக்கும் மாற்று நிலைபேறான தெரிவான ‘CarboMeter’ என்பது வடிவமைக்கப்பட்டிருந்தது.

விஜயத்தின் போது, அணியினருக்கு தமது சிந்தனைகளை அமெரிக்கத் தூதுவர் சங்குக்கும், சூக் ஹுன் சீஹாவுக்கும் வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்திருந்ததுடன், Microsoft Imagine Cup இல் பங்கேற்றதன் மூலம் தாம் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தையும் பகர்ந்திருந்தனர். தம்முடன் பிரத்தியேகமான தொடர்பைக் கொண்டிருந்த பிரச்சினைகள் தொடர்பில் இந்த மாணவர்கள் கவனம் செலுத்தியிருந்ததுடன், Microsoft Imagine Cup பயணத்தினூடாக, AI இன் சக்தியினூடாக தம்மால் எய்தக்கூடிய விடயங்களை அடைய ஊக்குவிப்புகள் கிடைத்திருந்ததாக குறிப்பிட்டிருந்தனர்.

தூதுவர் சங் கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையின் இரண்டு அணிகளையும் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். அவர்களின் ஆற்றல்களினூடாக நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. மாற்றத்துக்கான வழிகோலியாக புத்தாக்கம் அமைந்திருப்பதுடன், நிலைபேறான மற்றும் சுபீட்சமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு முக்கியமானதாக அமைந்துள்ளது. Microsoft Imagine Cup போன்ற கட்டமைப்புகளினூடாக தொழில்நுட்ப சிறப்பை கட்டியெழுப்பும் Microsoft இன் முயற்சிகள் பாராட்டுதலுக்குரியவை. இலங்கையிலும் அதற்கு அப்பாலும் பிரகாசமான எதிர்காலத்தை இவை அடையாளப்படுத்துகின்றன” என்றார்.

சீனா

# வதைக்கும் வெப்பம்



சீனாவின் பீஜிங் உள்ளிட்ட நகரங்களில் கடந்த சில நாள்களாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸாகக் காணப்படுகிறது. இதனால் வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் போன்றோரை வீட்டுக்கு வெளியே வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், அதிதீவிர வெப்பம் காரணமாக சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.


கடந்த பத்து நாள்களாக பீஜிங்கில் வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக பதிவாகி உள்ளது. 1961ஆம் ஆண்டுக்குப் பிறகு, தீவிர வெப்பத்தை சீனா எதிர்கொண்டுள்ளது. அதிக வெப்ப நிலை காரணமாக ஊழியர்கள் வீட்டிலிருந்து பணிபுரியுமாறு ஜெய்ஜிங் நகர நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் வடக்கு பகுதி தீவிர வெப்பத்துக்கு உள்ளான நிலையில், தென் மாகாணங்களில் தீவிர மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் மட்டும், 14 நாள்கள் தீவிர வெப்ப நிலையை சீனா எதிர்கொண்டுள்ளது. இனி வரும் ஒவ்வொரு மாதமும் 4 நாள்கள் வெப்பம் தீவிரமாக இருக்கும் என்று சீன வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தென்கொரியா

## ஒரே இரவில் ஒரு வயது குறைந்தது



தென் கொரிய அரசாங்கத்தால் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள ஒரு சட்டத்தின் மூலம் தென் கொரிய மக்கள் ஒரு வருடம் இளமையாகி விட்டதாக ஊடக அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

அந்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வயதை கணக்கிடும் பழைய முறையானது, ஒரு குழந்தை வயிற்றில் இருக்கும் போதே ஆரம்பிக்கிறது. அந்தக் குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஒரு வயது என்பதே அவர்களின் பழைய கணக்கீடு. அதேபோல இதுவரை, தென் கொரியர்கள் பிறக்கும் போது ஒரு வயதாகக் கருதப்பட்டு வந்ததோடு, அவர்களின் உண்மையான பிறந்தநாள் வரை காத்திருப்பதற்கு பதிலாக, ஜனவரி முதலாம் திகதி வந்தவுடன் தங்கள் வயதில் ஒரு வருடம் சேர்த்து கொள்ளும் பழக்கத்தையும் கடைபிடிக்கிறார்கள்.

அங்கு பிறக்கும் ஒரு குழந்தைக்கு பிறந்தவுடன் ஒரு வயது என கணக்கிடப்படுவதோடு, அதன் அடுத்த பிறந்த நாள் வருவதற்குள் புதிய ஆங்கில ஆண்டின் தொடக்க மாதமான ஜனவரி முதலாம் திகதி வந்தால் அந்த குழந்தையின் வயது 2 எனக் கணக்கிடப்படுகிறது. அதாவது, ஓர் ஆண்டின் டிசெம்பர் 31ஆம் திகதி ஒரு குழந்தை பிறந்தால் அன்று அந்த குழந்தைக்கு ஒரு வயது எனவும், அடுத்த நாளான ஜனவரி முதலாம் திகதி, அதே குழந்தைக்கு இரண்டு வயதாகவும் இருக்கும்.

சீனா

## 35 வயது வந்தால் வேலை போச்சு



பொதுவாக 20 பிளஸ் வயதில் வேலைக்குச் சேருகின்ற நாம் நல்லதொரு வேலை, நல்ல ஊதியம் என்ற நிலையை அடைவதற்கு 10, 12 ஆண்டுகள் ஆகிவிடும். மற்றொரு பக்கம் 30 வயதை தாண்டும்போதே இப்போதெல்லாம் வயது சார்ந்த உடல்நல பாதிப்புகள், மனக்கவலைகள் அணிவகுக்கத் தொடங்கி விடுகின்றன.


உதாரணத்திற்கு முடி உதிர்தல், நரைமுடி ஆகியவற்றில் தொடங்கி, உடல் பருமன், மனஅழுத்தம் போன்ற சிக்கல்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், 35 வயதிலேயே வேலை பறிபோகிவிடுமோ என்ற கவலை பெரும்பாலும் வந்துவிடாது.

ஏனென்றால் அனுபவமும் துடிப்பும் ஒருசேர இருக்கின்ற இந்த வயது ஊழியர்களை நிறுவனங்கள் கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும். ஆனால், சீனாவில் 35 வயதை எட்டுகின்ற ஊழியர்களுக்கு வேலை பறிபோய்விடுமோ என்ற மனக்கவலை ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளது.

சீனாவில் உள்ள பெரும்பாலான நிறுவனங்கள் 35 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களை வேலையில் வைத்திருக்க விரும்புவதில்லை. வேலை உத்தரவாதம் இல்லாத நிலையில் திருமணம், குழந்தை, எதிர்கால திட்டமிடல் போன்றவற்றை சீனர்கள் தள்ளிவைத்து வருகின்றனர்.

ஆம்ஸ்டர்டாம்

## பிரதமர் மார்க் ரூட் இராஜினாமா




நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட், தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். இதைத் தொடர்ந்து நெதர்லாந்து அரசியலில் பரப்பரப்பு தொற்றிக் கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வந்து நெதர்லாந்தில் குடியேறியவர்களுக்கு குடியுரிமை கொடுப்பது தொடர்பான சட்டமூலத்தை நிறைவேற்ற ஆளும் கூட்டணி அரசு முயன்ற நிலையில், சட்டமூலத்துக்கு கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் பிரதமர் மார்க் ரூட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மார்க் ரூட், “புலம்பெயர்ந்தோர் சட்டமூலம் தொடர்பாக கூட்டணி கட்சிகள் வேறுபட்ட கருத்தை கொண்டிருந்தன என்பதில் எந்த ரகசியமும் இல்லை. துரதிரஷ்டவசமாக அந்த வேறுபாடுகள் தீர்க்க முடியாதவையாகிவிட்டன என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. இதைத் தொடர்ந்து என் பதவியை நான் இராஜினாமா செய்கிறேன். அமைச்சரவை முழுவதும் ராஜினாமா செய்வதை எழுத்துபூர்வமாக அரசரிடம் ஒப்படைப்பேன்” என்றார்.

இதையடுத்து, 150 பாராளுமன்ற தொகுதிகளைக் கொண்ட நெதர்லாந்தில் விரைவில் தேர்தல் நடைபெறும் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய பிரதேசம்

## அனுமனுக்கு கஞ்சா படைப்பு

மத்திய பிரதேசம், சித்ரகூட் பகுதியில் அமைந்துள்ள அனுமன் கோவில் பிரசித்தி பெற்ற கோவிலாகத் திகழ்கிறது. அதற்குக் காரணம் இந்தக் கோவிலில் வழங்கப்படும் பிரசாதம் தான். அனுமனுக்கு நைவேத்தியமாகக் கஞ்சா படைக்கப்படுகிறது. மேலும், அனுமனுக்குப் படைக்கப்பட்ட கஞ்சா, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பிரசாதமாகவும் வழங்கப்படுகிறது.

பொதுவாகடு அனுமன் கோவில்களில் பிரசாதமாகவும் நைவேத்தியமாகவும் லட்டு, பூந்தி, அடை அல்லது துளசி போன்றவை தான் முதன்மையான பிரசாதமாக வழங்கப்படும். ஆனால், இந்தக் கோவிலில் வித்தியாசமாகக் கஞ்சா வழங்கப்படுகிறது. மேலும், ஸ்ரீ ராமர் வனவாசம் சென்றிருந்த போது, குறிப்பிட்ட காலம் சித்திரகூடத்தில் வசித்தார் என்றும் இதையடுத்து இந்தப் பகுதியில் அனுமனுக்குக் கோவில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அனுமான் சாலீஸாவை பாராயணம் செய்வதில் பிரசித்தி பெற்ற கோவில்களில் சித்திரக் கூட ஆஞ்சநேயர் கோவிலும் ஒன்று. கஞ்சா பிரசாதம் என்பது சிவபெருமான் மற்றும் ஆஞ்சநேயர் இருவரையுமே மகிழ்ச்சியாக்கும் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே இருக்கிறது.



மத்திய பிரதேசம்

## சிறுநீர் கழித்தவர் தவறை உணர்ந்தால் விடுவிக்கலாம்



தன் மீது சிறுநீர் கழித்து அவமரியாதை செய்த நபர் தவறை உணர்ந்திருந்தால் அவரை விடுவிக்குமாறு பாதிக்கப்பட்டவர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த பிரவேஷ் சுக்லா, பழங்குடியின இளைஞர் முகத்தில் சிறுநீர் கழித்து, அவமதித்த விவகாரம் நாட்டையே உலுக்கியது. இது தொடர்பான வீடியோ வெளியான நிலையில், சம்பந்தப்பட்ட பிரவேஷ் சுக்லா கைது செய்யப்பட்டார்.

மேலும் அவருக்கு சொந்தமான வீடு ‘பொக்லைன்’ மூலம் இடித்து தள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட பழங்குடியின இளைஞர் தஷ்ரத் ராவத்தை தனது இல்லத்திற்கு அழைத்து பேசிய முதலமைச்சர் சிவராஜ் சிங், அவரிடம் மன்னிப்புக் கோரி அவருடைய கால்களை கழுவி மரியாதை செலுத்தினார்.

அதனைதொடர்ந்து, அவருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரணம் மற்றும் வீடு கட்டுவதற்கான நிதியுதவியும் வழங்கப்பட்டது. இந்த நிலையில், சிறுநீர் கழித்த சுக்லா தவறை உணர்ந்ததால் அவரை விடுதலை செய்யுமாறு பாதிக்கப்பட்ட நபர் கோரிக்கை வைத்துள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான

# தொடரை கைப்பற்றிய ஆப்கானிஸ்தான்



பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஆப்கானிஸ்தான் வென்றிருந்த நிலையில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தான்: 331/9 (50 ஓவ. ) ( துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 145 (125), இப்ராஹிம் ஸட்ரான் 100 (119), மொஹமட் நபி ஆ. இ 25 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 2/50, முஸ்தபிசூர் 2/60, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/60, ஹஸன் மஹ்மூட் 2/70, எபொடொட் ஹொஸைன் 1/61)

பங்களாதேஷ்: 189/10 (43.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: முஷ்பிக்கூர் ரஹீம் 69 (85) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸல்ஹக் பரூக்கி 3/22, முஜீப் உர் ரஹ்மான் 3/40, ரஷீட் கான் 2/28, மொஹமட் நபி 1/29)

போட்டியின் நாயகன்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்

## நேருஜி-கிண்ணதுக்கான கால்பந்தாட்டத் தொடர்

■ எஸ்.கே. குமார்



நுவரெலியா யங் பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளத்தின் முன்னாள் உப தலைவரும் நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கின் முன்னாள் தலைவரும் நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் உப தலைவரான எல். நேருஜியின் வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரானது நுவரெலியா மாநகரசபை பொது மைதானத்தில் எதிர்வரும் வாரயிறுதியில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் சம்பியனாகும் அணிக்கு 30,000 ரூபாயும், இரண்டாமிடத்தை பெறும் அணிக்கு 15,000 ரூபாய் பணப்பரிசும் சான்றிதழ்களும் வெற்றி கிண்ணங்களும் வழங்கப்படும்.

இத்தொடரில் சிறந்த கால்பந்தாட்ட வீரர், சிறந்த கோல் காப்பாளர், அதிகமான கோல்களைப் பெற்ற வீரர் என தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும்.

இத்தொடரின் பரிசளிப்பு வைபவத்தில் எல். நேருஜி கலந்துகொண்டு பரிசுகளை வழங்குவார். இத்தொடரில்ல் நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 32 அணிகள் போட்டியிடுவதாக யங்பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் போட்டி ஏற்பாட்டுக்குழு தலைவரும் கால்பந்தாட்ட பயிற்றுவிற்பாளருமான எஸ். ஸ்டீபன் தெரிவித்தார்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

## சாஹிராவை வென்ற றோயல்


டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், றோயல் வளாகத்தில் நடைபெற்ற சாஹிராக் கல்லூரியுடனான போட்டியில் 44 ‑ 03 என்ற புள்ளிகள் கணக்கில் றோயல் கல்லூரி வென்றது.

றோயல் சார்பாக, டிஸாஸ் பத்திரண இரண்டு ட்ரைகளையும், சாருக செனவிரத்ன, கவினாஷ் ஸ்ரீகாந்த், அக்ரம் பாரூக், தன்வீர் ஹஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரைகளையும் பெற்றனர். நபீல் யஹியா மூன்று ட்ரைகளை கொன்வேர்ஷன்களாக மாற்றியதோடு, சிமக் ஷபீக் ஒரு ட்ரையை கொன்வேர்ஷனாக மாற்றி இருந்தார். இரண்டு பெனால்டிகளுக்கான புள்ளிகளையும் ஷபீக் பெற்றிருந்தார்.

சாஹிரா சார்பாக பெனால்டிகளுக்கான புள்ளிகளை அஹ்மட் சாட் பெற்றிருந்தார்.

Dialog SCHOOLS RUGBY

## யுனைட்டெட்டிலிருந்து விலகும் டி கியா



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளரான டேவிட் டி கியா, அக்கழகத்தை விட்டு வெளியேறுவதை உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த மாதத்துடன் 32 வயதான டி கியாவின் யுனைட்டெட்டுடனான ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில், கழகத்துக்காக 545 போட்டிகளில் விளையாடி 190 போட்டிகளில் எதுவித கோல்களையும் பெறாமல் தடுத்துள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டிலிருந்து கடந்த 2011ஆம் ஆண்டு யுனைட்டெட்டில் டி கியா இணைந்திருந்தார்.

## இன்டர் மிலன் செல்லும் ஹியூகோ லோரிஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் கோல் காப்பாளரான ஹியூகோ லோரிஸைக் கைச்சாத்திட இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் எதிர்பார்த்துள்ளது.

மிலனின் கோல் காப்பாளரான அன்ட்ரே ஒனானா, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டில் இணைவாரென எதிர்பார்க்கப்படுகையிலேயே மிலன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 10 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.